2018 ஜனவரி 10]

கிடங்கு அமைக்கப்பட்டு, விவசாயிகளின் தேவைகளுக்கேற்ப, உற்பத்தி செய்யப்படும் காய்கறிகள், பழங்களை வைப்பதற்கு இடங்கள் இருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை ஏற்று, தேவை ஏற்படின், குளிர்பதனக் கிடங்கு அமைப்பதற்கு அரசு தக்க நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10–50

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 16, மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.டி. வெங்கடாச்சலம், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

16—

ஆரம்ப சுகாதார நிலையம்

***9198—திரு. என்.டி. வெங்கடாச்சலம்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஈரோடு மாவட்டம், பெருந்துறை வட்டம், விஜயமங்கலம் ஆரம்ப சுகாதார நிலையத்தை 30 படுக்கைகள் வசதி கொண்ட ஆரம்ப சுகாதார நிலையமாக மேம்படுத்த அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.*

பெருந்துறை ஊராட்சி ஒன்றியத்திலே ஏற்கெனவே திங்களூர் பிரதான ஆரம்ப சுகாதார நிலையம் 30 படுக்கைகள் கொண்ட ஆரம்ப சுகாதார நிலையமாகத் தரமுயர்த்தப்பட்டு சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது. விஜயமங்கலம் என்பது அதே ஒன்றியத்தில் வருகின்றது. அங்கேயும் அதிக பிரசவங்கள் நடைபெறுகின்றன. மாதத்திற்கு 15 பிரசவங்களுக்கு மேலே அங்கே நடைபெறுகின்றன. வருங்காலத்திலே அங்கே நடைபெறக்கூடிய பிரசவங்களின் எண்ணிக்கையின் அடிப்படையிலும், வரக்கூடிய நோயாளிகளின் எண்ணிக்கையின் அடிப்படையிலும் அதைத் தரமுயர்த்துவதற்கு அரசு கனிவோடு பரிசீலனை செய்யும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2018 ஜனவரி 10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.டி. வெங்கடாச்சலம் அவர்கள்.

திரு. என்.டி. வெங்கடாச்சலம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அலெக்சாண்டரைப்போல வீரமும், ஏசுவைப்போல அன்பும், புத்தரைப் போன்ற ஞானமும், காந்தியைப் போன்ற சமூக, மனிதநேய ஒற்றுமையும் ஒருங்கே அமையப் பெற்றவர் புரட்சித் தலைவி மாண்புமிகு அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) காலத்தை வென்றவர்; காவியமானவர்; தமிழக மக்களுடைய வேதனையைத் தீர்த்தவர்; எங்களுடைய விழிகளில் நிறைந்தவர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். 'நான் நிரந்தரமானவன் அழிவதில்லை; எந்த நிலையிலும் எனக்கு மரணமில்லை' என்று கவியரசர் கண்ணதாசன் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, அம்மா அவர்கள் என்றைக்கும் புகழ் உடம்புடன் வாழ்வார்கள். விரல் நீட்டிய இடத்தில் வேல்போல் பாய்ந்து பணியாற்றும் ஒன்றரை கோடி தொண்டர்களை உருவாக்கியவர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) பகைவர்கள் நடுங்கும் நடை எங்கே? என்ற நாடோடி மன்னன் திரைப்படப் பாடலில் குறிப்பிட்டதைப்போல, மடங்கா வீரமும், அடங்கா ஆற்றலும் ஒருங்கே அமையப் பெற்ற அம்மா அவர்கள் எங்களுடைய பெருந்துறை தொகுதிக்கு திட்டங்களைக் கிள்ளிக் கொடுக்கவில்லை; அள்ளிக் கொடுத்திருக்கிறார்கள். ஆக, அந்த அடிப்படையிலே, மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், மாண்புமிகு துணை முதல்வர் அவர்களுக்கும் எனது வணக்கத்தைச் சொல்லிக்கொள்கிறேன்.

விஜயமங்கலம் ஆரம்ப சுகாதார நிலையத்தைத் தரமுயர்த்த வேண்டுமென்கிற இந்தக் கோரிக்கையை நீண்ட காலமாக நாங்கள் வைத்துக் கொண்டு வருகிறோம். மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் அருகிலே திங்களூர் பகுதியிலே இருக்கக்கூடிய ஆரம்ப சுகாதார நிலையத்தைத் தரமுயர்த்தியிருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். திங்களூர் பகுதிக்கும், நான் சொல்கிற இந்தப் பகுதிக்கும் 15 கிலோ மீட்டர் இடைவெளி இருக்கிறது. ஆக, 15 கிலோ மீட்டர் தூரம் அந்த மக்கள் சென்றுதான் சிகிச்சை பெற வேண்டும். அப்படி இல்லையென்றால், பெருந்துறையிலே இருக்கிற அந்த அரசு மருத்துவமனைக்குச் செல்ல வேண்டுமென்று சொன்னாலுங்கூட, அங்கும் 15 கிலோ மீட்டர் தொலைவு இருக்கிறது. இந்த மருத்துவமனையைப் பொறுத்தவரையிலே தினந்தோறும்

2018 ஜனவரி 10]

கிட்டதட்ட 200–க்கும் மேற்பட்ட வெளிநோயாளிகள் மருத்துவ சிகிச்சையைப் பெற்று, பயன்பெற்றுக் கொண்டிருக்கிறார்கள். விஜயமங்கலம் பகுதியைப் பொறுத்தவரையிலே, இங்கிருக்கும் விசைத்தறியாளர்களும், கைத்தறியாளர்களும் மிகப்பெரிய அளவிலே உற்பத்தி செய்து கொண்டிருக்கிறார்கள். இங்கிருந்துதான் முண்டா வேஷ்டி என்று சொல்லக்கூடிய வேஷ்டி, கைத்தறி புடவைகள் மற்றும் துண்டு போன்றவை மிகப் பெரிய அளவிலே நெய்யப்பட்டு வட மாநிலங்களுக்கும், கேரளாவுக்கும் அனுப்பப்படுகின்றன. ஆக, இந்தத் தொழிலிலே ஆயிரக்கணக்கான ஏழைக் கூலித் தொழிலாளர்கள் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றார்கள் அங்குள்ளவர்களுக்கு ஏதாவது நோய் ஏற்பட்டுவிட்டால் உடனடியாக அந்த மருத்துவமனையைத்தான் நாட வேண்டும்.

அதுமட்டுமல்லாமல், கோவையிலே இருந்து சேலம் செல்லக்கூடிய நான்கு வழிச் சாலை அந்தப் பகுதியிலே அமைந்து இருக்கின்ற காரணத்தாலே அங்கு விபத்து ஏற்பட்டாலும்கூட, இந்த மருத்துவமனைக்குத்தான் உடனடியாக மருத்துவம் பார்ப்பதற்கு வர வேண்டும். மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் புள்ளிவிவரத்தோடு பேசக்கூடியவர், புள்ளிவிவரங்களைக் கையிலே வைத்திருக்கக்கூடியவர். எங்கள் தொகுதிக்கு சுகாதாரத் துறையின் மூலமாக ஏராளமான திட்டங்களைக் கொடுத்திருக்கிறார்கள். கந்த சஷ்டியிலே சொல்வதைப்போல குறை ஒன்றும் இல்லை. இருந்தாலுங்கூட நாங்கள் தொடர்ந்து இந்தத் திட்டத்தைக் கேட்டுக் கொண்டிருக்கிறோம். ஏற்கெனவே அவர் சொன்ன பதிலில் எனக்கு நிறைவு இல்லை. ஆகவே, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் உடனடியாக இந்த ஆரம்ப சுகாதார நிலையத்தைத் தரமுயர்த்த வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாகக் கேட்பதோடு, தரமுயர்த்துவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

முற்பகல் 10–55

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வோர் ஊராட்சி ஒன்றியத்திலும், ஓர் ஆரம்ப சுகாதார நிலையத்தைத் தேர்ந்தெடுத்து அந்த ஆரம்ப*

சுகாதார நிலையத்திற்கு 5 மருத்துவர்களைக் கொடுத்து scan வசதியோடு 30 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாகத் தரமுயர்த்துகின்ற இந்த அற்புதமான திட்டத்தை 2011—ல் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தொடங்கி வைத்தார்கள். இந்தத் திட்டத்தைப் பொறுத்தவரையில், மாண்புமிகு அம்மா அவர்களுடைய கனவு இந்த ஆண்டு நிறைவு பெறுகிறது. அதாவது, இத்திட்டம் ஏற்கெனவே 375 ஒன்றியங்களில் பூர்த்தி செய்யப்பட்டுவிட்டது. இந்த ஆண்டு கூடுதலாக 12 ஆரம்ப சுகாதார நிலையங்கள், 30 படுக்கைகள் கொண்ட ஆரம்ப சுகாதார நிலையங்களாக மேம்படுத்தப்பட உள்ளன. இதன்படி, அனைத்து 385 ஒன்றியங்களிலும், ஓர் ஒன்றியத்திற்கு 30 படுக்கைகள் கொண்ட மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையம் என்ற அளவில் இத்திட்டம், இந்த நிதிநிலை ஆண்டோடு பூர்த்தியாகின்றது என்ற நல்ல செய்தியை நான் இந்த அவையிலே பதிய வைக்க விரும்புகின்றேன். இதைத் தொடர்ந்து, 385 ஒன்றியங்களிலும், ஓர் ஒன்றியத்திற்கு ஒரு 30 படுக்கைகள் வசதி கொண்ட ஆரம்ப சுகாதார நிலையம் என்ற திட்டம் இந்த ஆண்டு பூர்த்தியடைகின்ற காரணத்தினால், இனி வருங்காலங்களில், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற விஜயமங்கலம் பகுதியிலும், எங்கெல்லாம் அதிகமான நோயாளிகள் வருகின்றார்களோ, எங்கெல்லாம் அதிகமான பிரசவங்கள் நடைபெறுகின்றதோ அங்கெல்லாம் அதைக் கருத்திற்கொண்டு, ஆரம்ப சுகாதார நிலையத்தைத் தரமுயர்த்த மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு நிச்சயமாக ஆவன செய்யும். ‘குறையொன்றும் இல்லை’ என்ற பாடல் உங்கள் சட்டமன்றத் தொகுதியிலே ஒலிக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.டி. வெங்கடாச்சலம் அவர்கள்.

திரு. என்.டி. வெங்கடாச்சலம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு தாலுகாவிற்கு ஒரு மருத்துவமனை என்ற அடிப்படையில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தங்களுடைய பதிலைச் சொன்னார்கள். பொதுவாக, இன்றைக்கு மக்கள் அடிப்படைத் தேவைகளாக என்ன எதிர்பார்க்கிறார்கள் என்றால், நல்ல சாலை வசதியை எதிர்பார்க்கிறார்கள்; நல்ல குடிநீர் வசதியை எதிர்பார்க்கிறார்கள்; அதற்கடுத்தபடியாக, நல்ல சுகாதாரத்தை மக்கள் இன்றைக்கு எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். ஆக,

2018 ஜனவரி 10]

தாலுகா என்ற அளவில் பார்த்தோம் என்றால், சிறிய தாலுகாவும் இருக்கிறது, பெரிய தாலுகாவும் இருக்கிறது. எனது பெருந்துறை தாலுகாவைப் பொறுத்தவரையில், ஈரோடு மாவட்டத்தில் அது மிகப் பெரிய தாலுகாவாக இருக்கின்ற காரணத்தால், இந்தப் பகுதியினுடைய மக்களின் தேவைகளைக் கருத்திற்கொண்டு, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இன்றைக்கு சட்டமன்றப் பேரவையில் பதிய வைத்ததோடு மட்டுமல்லாமல், போர்க்கால அடிப்படையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று, இந்த நிதியாண்டிலேயே இந்தத் திட்டத்தை உடனடியாக அறிவிப்பதற்கு உரிய நடவடிக்கையை எடுக்க வேண்டும் என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாலுகாவைப் பொறுத்தவரையில், எங்கெல்லாம் புதிய தாலுகாக்கள் உருவாக்கப்படுகின்றனவோ அங்கெல்லாம் தாலுகா மருத்துவமனை அமைக்கின்ற திட்டத்தை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு செயல்படுத்தி வருகிறது. நமது வருவாய்த் துறை 71 புதிய தாலுகாக்களை அறிவித்து வரலாற்றுச் சாதனையைப் படைத்திருக்கிறது. அந்த 71 புதிய தாலுகாக்களிலும் உள்ள மருத்துவமனைகள் தாலுகா மருத்துவமனைகளாக தரமுயர்த்தப்படுகின்றன. அது ஒரு திட்டம். 30 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாக தரமுயர்த்தும் திட்டத்தைப் பொறுத்தவரையில், 385 ஒன்றியங்களிலும் இந்தத் திட்டத்தை நிறைவேற்றி, மாண்புமிகு அம்மா அவர்களுடைய கனவை பூர்த்தி செய்துவிட்டோம். எனவே, இனிவருங்காலங்களில் தேவையின் அடிப்படையில் உறுப்பினர்களின் கோரிக்கைகளின் அடிப்படையில், மக்கள் தொகையின் அடிப்படையில், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிய விஜயமங்கலம் போன்ற பகுதிகளில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையங்களைத் தரமுயர்த்த 100 சதவிகிதம் இந்த நிதியாண்டில் பரிசீலிக்கப்படும் என்ற நல்ல தகவலை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசின் சார்பாக, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு அன்போடு தெரிவித்துக்கொள்கின்றேன்.

[2018 ஜனவரி 10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி பெ. சீத்தாபதி அவர்கள்.

திருமதி பெ. சீத்தாபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமத்துவப் பெரியார் தலைவர் கலைஞர் அவர்களையும், ஓய்வறியா உதயசூரியன் அண்ணன் தளபதியார் அவர்களையும், (மேசையைத் தட்டும் ஒலி) தங்களையும் வணங்கி, மற்றுமுள்ள அனைவருக்கும் தமிழர் திருநாளாம் தமிழ்ப் புத்தாண்டு நல்வாழ்த்துக்களையும், வணக்கங்களையும் உரித்தாக்கிக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திண்டிவனம் தொகுதிக்குட்பட்ட நொளம்பூர் கிராமம் சுமார் 2 ஆயிரம் மக்கள்தொகை கொண்ட கிராமம் ஆகும். அவர்கள் மருத்துவமனைக்குச் செல்ல வேண்டுமானால், ஏறத்தாழ 10 கி.மீ. தூரம் கடந்து சென்று, சாரம், ஆவணிப்பூர், திண்டிவனம் போன்ற பகுதிகளுக்குத்தான் செல்ல வேண்டும். அங்கே போதுமான பேருந்து வசதிகளும் கிடையாது. அது ஓர் உள்ளடங்கிய கிராமம் ஆகும். மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களும் எங்கள் பகுதியைச் சேர்ந்தவர். அவர்களுக்கும் அந்தக் கிராமத்தைப் பற்றி நன்றாகத் தெரியும் என்பதை தெரிவித்துக்கொள்கின்றேன். எனவே, நொளம்பூர் கிராமத்தில் ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்துக் கொடுத்தால் மிகவும் சிறப்பாக இருக்கும். அவசர சிகிச்சைக்காகவும், கர்ப்பிணித் தாய்மார்களின் பேறுகால உதவிக்காகவும் ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் அங்கு கண்டிப்பாக வேண்டும். 'நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்' என்பார்கள்; 'உடம்பை வளர்த்தேன்; உயிரை வளர்த்தேனே' என்றார் திருமூலர். ஆக, இந்த வைர வரிகளுக்கேற்ப, அங்கே ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்துத் தர வேண்டும் என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியாவிலேயே எந்த மாநிலத்திலும் இல்லாத வகையில், தமிழகத்தில் 1,759 ஆரம்ப சுகதார நிலையங்கள் சிறப்பாகச் செயல்பட்டு வருகின்றன. ஏற்கெனவே சட்டமன்றத்தில்

2018 ஜனவரி 10]

அறிவித்தபடி, இந்த ஆண்டு 12+30 என மொத்தம் 42 புதிய ஆரம்ப சுகாதார நிலையங்களை 42 கோடி ரூபாய் செலவில் இன்னும் ஒரு மாதத்தில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைக்கவிருக்கிறார்கள். கடந்த ஆண்டு வைக்கப்பட்ட பல்வேறு உறுப்பினர்களுடைய கோரிக்கைகளையெல்லாம் பரிசீலனை செய்து, 42 புதிய ஆரம்ப சுகாதார நிலையங்களை இன்னும் ஒரு மாதத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைப்பார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற நொளம்பூர் பகுதியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பதற்கு அரசு கனிவோடு உரிய ஆய்வு செய்து நடவடிக்கை எடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11–00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்–விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.*

வினா வரிசை எண் 18, மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. ரவி, மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

18—

புதிய வருவாய் கோட்டம்

***22869—திரு. சு. ரவி:**

மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் நகரத்தைத் தலைமையிடமாகக் கொண்டு புதிய வருவாய் கோட்டம் உருவாக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களின் அனுமதியோடு திருத்திய விடையை அளிக்கின்றேன். தமிழக மக்களுக்காக தன்னையே*